1972 சனவரி 24]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) அரசின் தமிழ்நாடு சிறுதொழில்கள் நிறுவனம் நடத்தும் கிண்டி கண்ணுடித் தொழிற்சாலேயில் கண்ணுடிப் புட்டிகள் தயாரிக்கும் உத்தேசம் இருக்கிறது.

பெரியாறு திட்டத்தின் நீர்மட்டங்கள்

* 22 வின—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கடந்த மூன்று ஆண்டுகளாக, பெரியாறு கால்வாயில் தண்ணீர் திறக்கப் படும்போது பெரியாறு அணேயின் நீர்மட்டம் எத்தனே கன அடியாக இருந்தது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: கடந்த மூன்று ஆண்டுகளின் பெரியாறு திட்டத்தின் நீர்த்தேக்க அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

பெரியாறு முக்கியக் கால்வாயைத் திறந்துவிடப்பட்ட நாட்களும்		பெரியாற்றில் உள்ள மொத்த நீர்த்தேக்க அளவும்.
1—8—1969	..	5,057 மில்லியன் கன அடி.
1—6—1970	..	3,754 ,,
5—7—1971	..	5,498 ,,

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, பெரியாறு பாசனப் பகுதியில் கடந்த 3 ஆண்டுக்காலமாக தண்ணீர்ப் பற்ருக்குறை காரணமாக ஒரு போக சாகுபடி செய்யப்பட்டு வந்திருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்திக்க அரசு சார்பிலே பெரியாறு அபிவிருத்தித் திட்டம் என்று மதிப்பீடு ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கிறதே, அந்த மதிப்பீடு எத்தனே கோடி ரூபாய் அளவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது, எந்த ஆண்டு அது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றித் தனியாகக் கேள்விபோட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

State Farms Corporation

* 23 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Seed Farms Corporation has sought the views of this Government in setting up of a farm in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) புதுடில்லி பண்ணே நிறுவனத்தால் பண்ணே ஆரம்பிப்பதற்கு வட ஆற்காடு மாவட்டத்தில் மேல்சங்கம் ஆநந்தவாடி ஒதுக்கக் காட்டில் 10,000 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேற்படி இடத்தை நிறுவனத்திற்கு பண்ணே ஆரம்பிப்பதற்கு அளிக்குமாறு அரசு ஆணே வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பண்ணே 1971-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் நாள் மாண்புமிகு வேளாண்மை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.